பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 29 சனிக்கிழமை 13.03.2021 கதிர் 359

## எமது குடும்பத்துக்குள் குழப்பத்தை உருவாக்க சிலர் முயற்சிக்கின்றனர்

### கோட்டாபய கவலை

பல்வேறுதரப்பினர்கள்தமது குடும்பத்தில் குழப்பங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவ்வாறு

2

# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துங்கள்!



### உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட வரைபு அல்லது அதில் உள்ள குழப்பங்களை நீக்கி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொகுதி முறை, எல்லை நிர்ணயம், ஐம்பதுக்கு ஐம்பது பெண்களின் அமைப்பு உள்ளிட்ட கடந்த அரசால் கொண்டுவரப்பட்ட சட்ட வரைவு அவர்களாலே தோற்கடிக்கப்பட்டது. மாகாண சபைகள் இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலைமை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி தேர்தலை விரைவாக நடத்த வேண்டியதன் அவசியத்தைஜனாதிபதிவலியுறுத்தியுள்ளார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன

2

# மோடி – கோட்டா இன்று தொலைபேசியில் பேச்சு

### ஜெனிவா விவகாரம் ஆராயப்பட்டதாகத் தகவல்



**புதுடில்லி, மார்ச் 13**

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் இன்று பேசினார்.**

**- புதுடில்லியில் பிரதமர் அலுவலகம் இன்று பிற்பகல் இந்தத் தகவலைத் தெரிவித்தது.**

2



## சர்வதேச விசாரணையை கோர வேண்டும் இந்தியா

### தூதுவருடனான சந்திப்பில் கஜேந்திரகுமார் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் மீதான இனப்படுகொலைக்கான பொறுப்புகூறலை வலியுறுத்துவதில் இந்தியா காத்திரமான பங்கை வகிக்க வேண்டும். அத்துடன், சர்வதேச விசாரணையை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

- இவ்வாறு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுடனான சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. வலியுறுத்தினார்.

2

## யார் விமர்சித்தாலும் கூட பிரேரணை நிறைவேறும்!

### சம்பந்தன் அதீத நம்பிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது திருத்தங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவு கனதியாகவே உள்ளது. இதை விமர்சிப்பவர்கள் விமர்சிக்கட்டும். ஆனால், இந்த வரைவு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியே தீரும். இது எமது அசைக்க முடியாத நம்பிக்கை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள்

2

## அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு

### இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை; கூட்டமைப்புடனான பேச்சில் தூதுவர் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் இன்று காலை 9.30 முதல் சுமார் ஒரு மணி நேரம் முக்கிய பேச்சு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

2

## புர்காவுக்குத் தடை!

### அமைச்சரவைப் பத்திரத்தில் சரத் வீரசேகர கையெழுத்து

இலங்கையில் பொது இடங்களில் முகத்தை மறைக்கும் 'புர்கா' அணிவதைத் தடை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் தான் கையெழுத்திட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் இன்று காலை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, இலங்கையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதிவு

2

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L 2023
தொழினுட்பபிரிவு ஆரம்பம்
14.03.2021 ஞாயிறு காலை 09 மணி

- பொறியியல் தொழினுட்பம்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

சங்கானையில் உதயமாகின்றது
NFLASH SUPER DETTERGENT
IS நிறுவனத்தின்
முகவர் நிறுவனம்
Hi Clean Brand உள்ளூர் தயாரிப்புக்களான
பாடசாலைகளுக்குரிய தொற்றுநீக்கி திரவங்கள், சுகாதார மேம்பாட்டு உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு -
இல 4/1, சங்கானை சந்தைமேல்மாடி,
பிரதானவீதி, சங்கானை.
077 513 4348
0771267562

NFlash Super Detergent
607A K.K.S. Road, Jaffna.
021 222 2855

## சர்வதேச விசாரணையை ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மதிக்கிறோம். ஆனால், அதன் வழியான 13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்க முடியாது. தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் தீர்வைத் தொடர்ந்தும் வலியுறுத்துவோம் எனவும் இந்தியத் தூதுவரிடம் தான் தெரிவித்தார் என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. கூறினார்.

இந்தியப் பாதுகாப்பு நலன்களுக்கு தமிழர் தேசம் ஒரு கவசமாகவே இருக்கும். நாம் இந்திய நலன்களுக்கு எதிரானவர்கள் அல்லர். பூகோள அரசியல் போட்டியின் பகடைகளாக இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியை இந்தியாவுக்கு எதிரான சக்திகளுக்கு வழங்குவதை நாம் எதிர்க்கின்றோம் எனவும் இந்தியத் தூதுவரிடம் கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

வட பகுதிக்கு விஜயம் செய்துள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றார். அதன் ஓர் அங்கமாக இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் சந்திப்பு இடம்பெற்றது.

சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவை ஒன்றாக இன்று காலை இந்தியத் தூதுவர் சந்தித்துப் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புர்காவுக்குத் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படாத மதரஸா பாடசாலைகள் இருக்கின்றன என்றும், அவை முறையாகக் கட்டுப்படுத்தப்படாமையால் எதிர்காலத்தில் அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டில் 5 முதல் 16 வயதுக்கு உட்பட்ட அனைத்துப் பிள்ளைகளும் தேசிய கல்வித் திட்டத்தின் கீழ் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## அதியுச்ச அதிகாரப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அரசியல் மற்றும் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இலங்கை அரசியலில் இந்தியாவின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாது எனவும், அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாகவும் பேசப்பட்டது.

ஏற்கனவே மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக அதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கைக்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை வெகுவிரைவில் இடம்பெறும் என்று இந்தியத் தூதுவர் இதன்போது கூறினார்.

## யார் விமர்சித்தாலும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள், அரச படைகளால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடூரங்கள் ஆகியவற்றுக்கு தீர்வு காணும் வகையில் ஐ.நா. பிரேரணையின் புதிய வரைவில் பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

பிரிட்டன் தலைமையில் முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணைக்கு பல நாடுகள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

பல நாடுகளின் தூதுவர்களுடன் நாம் பேச்சுக்களை நடத்தி பிரேரணைக்கு ஆதரவுவழங்குமாறும்கோரியுள்ளோம்.

அதேவேளை, பிரேரணைக்கு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைக் கோரி பகிரங்க அறிக்கையொன்றையும் நாம் வெளியிட்டுள்ளோம்.

எனவே, இந்த வரைவு உறுப்புரிமை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியே தீரும். இது எமது அசைக்க முடியாத நம்பிக்கை - என்றார்.

## மோடி - கோட்டா இன்று ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் விவகாரத்தை ஒட்டி உரையாடினார் என ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

எனினும், சர்வதேச அமைப்புகளில் இரு நாட்டு ஒத்துழைப்புக் குறித்து இருவரும் உரையாடினர்' - என்ற சாரப்பட இந்தியப் பிரதமரின் அலுவலக செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டது ஜெனிவா விவகாரம்தான் என அவதானிகள் குறிப்பிட்டனர்.

“இரண்டு நாடுகளுக்கும் இடையில் இரு தரப்புகள் மற்றும் பல தரப்புகள் சம்பந்தப்பட்ட சர்வதேச அரங்குகளில் தற்போது பேணும் ஒத்துழைப்பு உட்பட பல தரப்பட்ட விடயங்களை மேலோட்டமாகப் பேசினார்.

“இப்போதைய கொவிட் - 19 சவால் உட்பட்ட விடயங்களில் இரண்டு நாடுகளின் உரிய அதிகாரிகள் ஒழுங்கு முறையான தொடர்பாடலை பேண வேண்டும் என இருவரும் இணங்கினர்.

“இந்தியாவின் அண்டை நாடுகளுக்கான முக்கியத்துவத்தை இலங்கை முதன் நாடாக உள்ளது என்பதை பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தினார்.”

- இப்படி இந்தியப் பிரதமரின் அலுவலகச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது. (உ)

## எமது குடும்பத்துக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குடும்பத்துக்குள் யாராலும் குழப்பங்களை ஏற்படுத்திவிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபை மன்றத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்ஷ நமக்கு மட்டுமல்ல, முழு ஆசியாவிலும் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் என்பதனை அனைவரும் அறிவர். அவருடைய அரசியல் அறிவை யாரும் நெருங்க முடியாது. அத்தகைய தலைவர்ஒருவர்நாட்டைவழிநடத்துவது ஒரு பெரிய பாக்கியம் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று, பஸில் ராஜபக்ஷ இந்த நாட்டில் ஓர் அரசை உருவாக்கிக் கொடுப்பதில் முன்நின்று செயற்பட்டார் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அத்தகைய இரண்டு தலைவர்களுடன் அரசை முன்னெடுத்துச் செல்வது மிகவும் எளிதானது.

இதேவேளை, நான் வழங்கும் நியமனங்களில் மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் அழுத்தங்களைக் கொடுத்ததில்லை. அதேபோன்று பஸில் ராஜபக்ஷவும் அந்த விடயங்களில் தலையிட்டதில்லை. இவர்களின் ஒத்துழைப்புடன் நாட்டை எந்தவாரு நெருக்கடியும் இல்லாமல் முன்நோக்கிக் கொண்டு செல்வோம் என்று தைரியமாகக் கூறுகின்றேன் - என்றார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**தொலைபேசி இலக்கம்-**
**076 443 8622**

## மாகாண சபைத் தேர்தலை விரைவில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசியத்துக்கும் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளித்து கட்சியின் கொள்கைகள் மற்றும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, கடந்த 15 மாதங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு தேசியவாத அரசு ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அதனை வீழ்த்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டன. மஹிந்த ராஜபக்ஷவை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தவறான பிரசாரங்களுக்கு பலியாகி கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு எவ்வளவு தூரம் பின்னடைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாக முழு நாட்டுக்கும் பிக்குகளுக்கும் போர் வீரர்களுக்கும் ஏற்பட்ட அவல நிலையை மக்கள் அறிந்திருக்கிறார்கள்.

இந்தச் சக்திகள் அரசின் தற்போதைய திட்டங்களை நாசப்படுத்த மீண்டும் முயற்சிக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். பேராயரின் ஒப்புதலுடனும் நம்பிக்கையின் அடிப்படையிலுமே ஆணைக் குழுவின் பணிகளைத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பெப்ரவரி முதலாம் திகதி ஒப்படைக்கப்பட்ட இந்த அறிக்கை 28 நாள்களுக்குள் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையை மறைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தவறான பிரசாரங்களைப் பரப்புகின்றது. தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் விடயங்களைத் தவிர மற்ற அனைத்தும் மக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய எம்.சி.சி. ஒப்பந்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. போர் வீரர்களுக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் பெரும் அடியைக் கொடுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான முன்மொழிவுக்கு வழங்கப்பட்ட இணை அனுசரணை நீக்கிக்கொள்ளப்பட்டது. குறுகிய காலத்தில் நாட்டுக்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் குறித்து யாரும்பேசுவதில்லை. எவ்வாறாயினும், மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் மற்றும் கொள்கைகளைப் பாதுகாக்கும் அதேவேளையில் நாட்டின் முன்னேற்றத்துக்கும் நாம் உறுதிபூண்டுள்ளோம். - என்றார்.

**இஞ்சி கன்று விற்பனைக்கு**

தரமான இஞ்சி கன்று
விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**

1 1/2 மாத மஞ்சள் கன்று
விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு
எடுத்து வந்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பிரேரணை வடிவம் வெளியானது

**ஜெனிவாவில் ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக பிரிட்டன், ஜேர்மனி, கனடா, மஸிடோனியா, மொன்ரிநீக்காரோ ஆகியவை கூட்டாக சமர்ப்பித்துள்ள பிரேரணையின் திருத்தப்பட்ட வடிவம் வெளியாகியுள்ளது.**

**இலங்கை விடயத்தில் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்கள் பக்கத்திலிருந்து இந்தப் பிரேரணை வடிவம் தொடர்பில் மாறுபட்ட – முரண்பட்ட – கருத்து நிலைப்பாடுகள் பிரதிபலிக்கப்பட்டுள்ளன.**

**இந்தப் பிரேரணையை அடியோடு நிராகரிப்பதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பகிரங்க அறிக்கை வெளியிட்டுள்ளது.**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் போன்றவையும் இந்தப் பிரேரணை தொடர்பில் அதிருப்தியும், அவநம்பிக்கையும், விசனமும் வெளியிட்டுள்ளன.**

**இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், இனவழிப்பு அட்டூழியங்கள் ஆகியவற்றுக்காக இந்த விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு மாற்றுங்கள் என்ற பரிந்துரை – கோரிக்கை சிபாரிசு – இந்தப் பிரேரணை வடிவத்தில் நேரடியாகவும், ஐயத்துக்கு இடமின்றித் தெளிவாகவும் இல்லை என்பது இப்பிரேரணை வடிவத்தை எதிர்க்கும் தமிழ்த் தரப்புகளின் பிரதான ஆதங்கம்.**

**ஆனால், பிரேரணை வடிவம் இவ் விவகாரத்தை வேறு விதமாகக் கையாள்கின்றது.**

**இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரியுங்கள் என்று கூறி, பந்தை இன்னொரு களத்துக்குள் அடித்துவிட்டு, தங்களின் தளத்தில் அதைக் கையாள முடியாத நிலைமையை ஏற்படுத்துவதற்கு, பிரேரணையை முன்வைக்கும் நாடுகள் தயாராக இல்லை.**

**தகைமையுள்ள – சர்வதேச நியமங்களுக்கு அமைவான – ஒரு பொறிமுறை மூலம் பொறுப்புக் கூறல் விவகாரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுவதன் மூலம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் போன்ற ஒன்றில் இலங்கை விடயம் கையாளப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துக் கொண்டு, அதேசமயம் இலங்கை விடயம் ஜெனிவா மனித உரிமை கவுன்ஸிலின் கையை விட்டு நழுவிச் செல்லாத வகையிலும் தடக்குப் போட அவை முனைகின்றன.**

**இப்போது இறுதி செய்யப்பட்டுள்ள பிரேரணையின் வடிவம் இதனைத்தான் நமக்கு உணர்த்தி நிற்கின்றது.**

**அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முழு அளவிலான விசாரணை நடத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று இப்பிரேரணை கோடி காட்டுகின்றது.**

**ஐ.நா. அறிக்கையாளர்கள் ஏற்கனவே இலங்கை தொடர்பாகப் பரிந்துரைத்துள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற வாசகமும் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.**

**அதனால்தான் தமிழர் தரப்பில் ஆகக் கூடிய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இப்போது ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வடிவம் கனதியாக உள்ளது என முழுத் திருப்தி தெரிவித்திருக்கின்றார்.**

**இந்தப் பிரேரணை வடிவத்தை தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஒன்றே நிராகரித்துள்ள நிலையில் அதனை முழு அளவில் நம்பிக்கையுடன் வரவேற்கின்றார் கூட்டமைப்பின் தலைவரும் முதிர்ந்த அரசியல்வாதியுமான சம்பந்தன்.**

**இயலுதல் – இயலாமை, சாத்தியம் – அசாத்தியம், யதார்த்தம் – வாய்ப்பின்மை போன்ற பலவற்றை எடை போடும் நீண்ட கால அரசியல் பட்டறிவு இத்தகைய முடிவையும் நிலைப்பாட்டையும் எடுக்க அவரைத் தூண்டியிருக்கும் எனக் கருதலாம்.**

**இலங்கையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அரச படைகளால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதியான தீர்வு காணுதல் போன்றவை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் உரிய பரிந்துரைகள் இயன்ற அளவுக்குச் செய்யப்பட்டுள்ளன என்பது சம்பந்தனின் நிலைப்பாடு.**

**தமிழர்கள் எதிர்பார்க்கின்றவாறு இந்தப் பிரேரணை இன்னும் பத்து நாள்களில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வெற்றிகரமாக தீர்மானமாக நிறைவேறிய பின்னர் தளத்தில் – களத்தில் – அது ஏற்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான மாற்றங்களில்தான் சம்பந்தனின் இன்றைய நிலைப்பாடு மதிப்பீடு செய்யப்பட முடியும்.**

# நாட்டில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு: அறுவைச் சிகிச்சைகளுக்கும் சிக்கல்!



## ராஜித சுட்டிக்காட்டு

நாட்டில் தற்போது பாரிய மருந்துத் தட்டுப்பாடுஏற்பட்டுள்ளதால், அறுவைச்சிகிச்சைகளை முன்னெடுப்பதில் கூட சிக்கல் காணப்படுகிறது.

புற்று நோய் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் லட்சக்கணக்கில் பணத்தை செலவிட்டு மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் தற்போது பாரிய மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அறுவை சிகிச்சைகளும் நிறுத்தப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்று நோய் உள்ளிட்ட முக்கிய நோய்களுக்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நோயாளர்களுக்கு பணம் கொடுத்து மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது ஆட்சிக் காலத்தில் மருந்துகளுக்கான விலை குறைக்கப்பட்டது. ஆனால் தற்போது ஒரு லட்சம் ரூபா வரை மருந்துகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாம் தீவிர நோயாளிகளுக்கு இலவசமாக மருந்தை வழங்கினோம். தற்போது அந்த சலுகையும் நீக்கப்பட்டுள்ளது. இதன் காரணமான வறுமையிலுள்ள மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தனியார் மருந்தகங்கள் உள்ளிட்டவை தத்தமது விருப்பத்துக்கு மருந்துகளின் விலையை அதிகரிப்பதற்காகவா எமது அரசாங்கத்தில் மருந்துகளின் விலைக் கட்டுப்பாட்டுக்கான சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட்டது ? மருந்து தட்டுப்பாடு தீர்க்கப்படாத இந்நிலையில் வைத்தியசாலை கட்டட நிர்மாண பணிகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு நிதி இல்லை என்று கூறும் அரசாங்கம் , சீனி இறக்குமதி வரிச் சலுகை மூலம் 1,500 கோடி ரூபா மோசடியில் ஈடுபட்டுள்ளது. இது இலங்கை வரலாற்றில் இடம் பெற்ற பாரிய மோசடியாகும்.– என்றார்.

# மாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்தவேண்டும்!

## ஐ.தே.க. வலியுறுத்தல்

மாகாணசபைகளுக்கு சொந்தமான நிறுவனங்களை அரச அதிகாரிகளுக்குக் கீழ் கொண்டுவந்து நிர்வகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தி மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் மாகாணசபையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் கட்சியின் பெண்கள் அமைப்பு நிறைவேற்றி இருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி கண்டி மாவட்ட தலைவி சாந்தினி கோன்காகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மாகாணசபைத் தேர்தலை நடத்தி அதற்கான மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அரசாங்கம் மாகாணசபைக்கு உரித்தான நிறுவனங்களின் நிர்வாகத்தை அரச அதிகாரிகளுக்கு கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருகின்றது. மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படவேண்டிய நிறுவனங்களை அரச அதிகாரிகளை நியமித்து, அரசாங்கத்துக்குத் தேவையான முறையில் இதன் நிர்வாகத்தை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது.

அதனால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதை தொடர்ந்தும் காலம் கடத்தாமல் விரைவாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். அத்துடன் மாகாணசபையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் கட்சியின் பெண்கள் அமைப்பு நிறைவேற்றி இருக்கின்றது. சர்வதேச பெண்கள் தினத்திலே இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

மேலும் 2017 ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தலில் பெண் வேட்பாளர்களுக்கு 25 வீத பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியது ஐக்கிய தேசியக் கட்சி யாகும். அதேபோன்றதொரு பிரேரணையை மாகாணசபையிலும் உள்வாங்க மாகாண சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் பிரேரித்திருக்கின்றோம்.

அத்துடன் நாட்டின் வாக்காளர்களில் 56 வீதமானவர்கள் பெண்களாவர். என்றாலும் தற்போது நாடாளுமன்றத்தில் 12 பெண் உறுப்பினர்களே இருக்கின்றனர். அது நாடாளுமன்ற உறுப்பினர்களில் 5வீதமாகும். அதில் 4 பேர் தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட்டவர்கள். அதனால் பிரதேசசபை போன்று மாகாணசபை மற்றும் நாடாளுமன்றங்களுக்கு பெண்களின் பிரதிநிதித்துவத்தை வாக்காளர்களினாலேயே அதிகரிப்பதற்கு, கிராம மட்டத்தில் பெண்களைத் தெளிவூட்டும் நடவடிக்கையை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம். – என்றார்.

# வட கணினியத்தின் முதலாவது கலந்துரையாடல்!

வட கணினியம் கணினிக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் வடக்கில் கணினி தொடர்பிலான கற்கை நெறிகளினை ஆரம்பிப்பது மற்றும் தொழில் வளர்ச்சி, உற்பத்தி பெருக்கம், வியாபார விருத்தி, பொருளாதார மேம்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் நாளை 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணியளவில் சூம் செயலியூடாக நிகழ் நிலையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் துறைசார் வல்லுநர்கள் மற்றும் வடக்கின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களை பதிவு செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர். மேலதிக விவரங்களை vada.kaniniyam என்ற முகநூல் பக்கம் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஊடக குருகுலம்** விரைவில் ஆரம்பம்...

மூத்த ஊடகவியலாளர் திரு.வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத் துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத் தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்து கொள்ளலாம்.

உங்களின் சுயவிவரக் கோவையினை Kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தொடர்புகளுக்கு:- 076 443 8623

# பிரதமர் மோடி 26 ஆம் திகதி வங்காளதேசம் செல்கிறார்



நமது அண்டை நாடான வங்காளதேசம் 1971 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.

அதன் சுதந்திர தின பொன் விழா கொண்டாட்டம், டாக்காவில் வரும் 26 ஆம் திகதி பிரமாண்டமாக நடக்கவுள்ளது. இந்த கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக பிரதமர் நரேந்திர மோடி அழைக்கப்பட்டு, பங்கேற்கவுள்ளார்.

இதற்காக 2 நாள் பயணமாக அவர் 26 ஆம் திகதி டாக்கா செல்லவுள்ளார்.

இந்தியா கொரோனா வைரஸ் பெருந் தொற்றுக்கு எதிராக போராடி வந்ததால் 15 மாதங்களாக பிரதமர் மோடி எந்தவொரு வெளிநாட்டுக்கும் செல்லவில்லை.

இந்தநிலையில் 15 மாதங்களில் முதல் வெளிநாட்டு பயணமாக அவர் வங்காளதேசம் செல்வது முக்கியத்துவம் பெறுகிறது.

26 ஆம் திகதி டாக்காவில் நடைபெறும் வங்காளதேச சுதந்திர தின பொன்விழாவில் மோடி கலந்து கொள்ளவுள்ளார்.

மறுநாளில், சத்கிராவில் உள்ள ஜேஷோரேஷ்வரி காளி கோவிலுக்கு பிரதமர் மோடி செல்லவுள்ளார். இது மிக பழமையான கோவில் ஆகும்.

இதேபோன்று கோபால்கஞ்ச் பகுதியில் ஒரகண்டியில் உள்ள மாதுவா கோவிலுக்கும் அவர் செல்வதுடன், அங்கு அவருக்கு உள்ளூர் மக்கள் வரவேற்பு அளிக்க காத்திருக்கிறார்கள்.

இந்த கோவில்களுக்கு பிரதமர் மோடி சென்று வழிபாடு நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளை டாக்காவில் உள்ள இந்திய தூதரகம் செய்துள்ளது.

மேலும் துங்கிபாராவில் உள்ள வங்கபந்து ஷேக் முஜிபுர் ரகுமான் நினைவிடத்துக்கும் பிரதமர் மோடி சென்று மலரஞ்சலி செலுத்தவுள்ளார். அங்கு அவரை அந்த நாட்டின் பிரதமர் ஷேக் ஹசீனா வரவேற்பார்.

நாட் மந்திருக்கும் மோடி சென்று அங்கு அவர் மாதுவா மோகா மின் தலைவர் மாதுச்சாரியா பத்மநாப தாக்கூர் குடும்பத்தினரையும் சந்தித்து பேசுவார் என வங்காளதேசத்தில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் நெட்பிளிக்ஸ் நிறுவனத்துக்கு நோட்டீஸ்

நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் பாம்பே பேகம்ஸ் என்ற தொடரில் குழந்தைகள் ஆபாசமாக சித்தரிக்கப்படுவதாக எழுந்த புகாரைய டுத்து, அதை நிறுத்தக் கூறி குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் நோட்டீஸ் அனுப்பியிருந்த நிலையில், நெட்பிளிக்ஸ் நிறுவனம் கூடுதல் அவகாசம் கோரியுள்ளது.

இது குறித்து அந்த ஆணையத்தின் தலைவர் பிரியாங்க் கனூங்கோ கூறுகையில், நெட்பிளிக்ஸ் தரப்பில் நேரில் வந்து எழுத்துப்பூர்வமாக விளக்கம் அளிக்கப்பட்டதாகவும், அந்த தொடரை ஆய்வு செய்து நீக்குவது தொடர்பாக முடிவெடுக்க கூடுதல் அவகாசம் கோரப்பட்டதாகவும் கூறிய அவர், எதிர்வரும் செவ்வாய் கிழமை வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் அந்த தொடரை தயாரித்த குழுவினர் ஆணைய அதிகாரிகளை சந்திக்க நெட்பிளிக்ஸ் தரப்பில் அனுமதி கோரப்பட்ட நிலையில், செவ்வாயன்று காலை 11.30 மணிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# இந்தியாவில் நேற்று மட்டும் 24,882 பேருக்கு கொரோனா

இந்தியாவில் நேற்று ஒரேநாளில் புதிதாக 24,882 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

ஒரேநாளில் 140 பேர் கொரோனாவால் உயிரிழந்தனர். இன்று காலை நிலவரப்படி 2,02,022 பேர் தற்போதைய நோயாளிகளாக உள்ளனர்.

நேற்று வரை மொத்தம் 2 கோடியே 82 லட்சம் பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மகாராஷ்டிரத்தில் கடந்த சில நாள்களாக நாள்தோறும் புதிதாகப் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்படுள்ளனர்.

புனேயில் கடந்த சில நாட்களாகக் கொரோனா பரவல் அதிகரித்துள்ளதால் பள்ளி, கல்லூரிகள் மார்ச் இறுதி வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மம்தா பானர்ஜி வீடு திரும்பினார்



மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், முதல் - மந்திரியுமான மம்தா பானர்ஜி, நந்திகிராம் தொகுதியில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் சமீபத்தில் அவர் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது அடையாளம் தெரியாத சிலரால் பிடித்து தள்ளப்பட்டார். இதில் கால் மற்றும் உடலில் பல இடங்களில் காயமடைந்த மம்தா கொல்கத்தாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரது காலுக்கு கட்டு போடப்பட்டது. மேலும் பல்வேறு சிகிச்சைகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

இதனால் அவரது உடல்நிலை முன்னேற்றம் அடைந்தது. எனவே தன்னை டிஸ்சார்ஜ் செய்யுமாறு மம்தா பானர்ஜி வைத்தியர்களை கேட்டுக் கொண்டமையின் அடிப்படையில் நேற்று அவரை வைத்தியசாலை நிர்வாகம் டிஸ்சார்ஜ் செய்தது. இதைத்தொடர்ந்து அவரை சக்கர நாற்காலியில் உதவியாளர்கள் வீட்டுக்கு அழைத்து சென்றனர். அவரைபார்ப்பதற்காகஏராளமானகட்சித்தொண்டர்கள் வைத்தியசாலையில் குவிந்திருந்தனர். அவர்கள் மம்தா விரைவில் குணமடைய பிரார்த்தித்தனர்.

# மம்தா மீதான தாக்குதல் தொடர்பாக உயர்மட்ட விசாரணைக்கு வலியுறுத்தல்

மேற்கு வங்காள முதல் - மந்திரி மம்தா பானர்ஜி, கடந்த புதன்கிழமை வேட்புமனு தாக்கலுக்குப் பின் தன்னை சிலர் தாக்கிவிட்டதாக குற்றம்சாட்டினார். இடதுகாலில் காயமடைந்த அவர், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி நேற்று வெளியிட்ட டுவிட்டர் பதிவில், 'தேர்தலின்போது மம்தா பானர்ஜி திடீரென காயமடைந்திருப்பது மிகவும் சோகமானது, துரதிர்ஷ்டவசமானது. அவர் விரைவில் நலமடைய நான் வாழ்த்துகிறேன்.



அதேநேரம், தேர்தல் ஆணையம் இந்த விஷயத்தை தீவிரமாக எடுத்துக் கொண்டு, ஒரு உயர்மட்ட விசாரணை நடத்தவேண்டும் என்று பகுஜன் சமாஜ் சார்பில் வலியுறுத்துகிறேன்' என்று தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள மற்றொரு டுவிட்டர் பதிவில், 'இந்த சம்பவத்தை மனதில் கொண்டு, மேற்கு வங்காளத் தேர்தலில் போட்டியிடும் பகுஜன் சமாஜ் கட்சியின் அனைத்து வேட்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திரிணாமுல் காங்கிரசில் இணைந்த பா.ஜ.க. தலைவர் யஷ்வந்த் சின்ஹா



முன்னாள் மத்திய அமைச்சர் யஸ்வந்த் சின்ஹா திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது நிதியமைச்சராகவும், வெளியுறவு அமைச்சராகவும் இருந்த யஸ்வந்த் சின்கா, 2018ஆம் ஆண்டில் பா.ஜ.கவில் இருந்து விலகினார்.

இந்திய ஜனநாயகம் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாகக் குற்றஞ்சாட்டிய யஸ்வந்த் சின்ஹா, மோடி அரசின் செயல்பாடுகளைத் தொடர்ந்து விமர்சித்து வந்தார். இந்நிலையில் இன்று கொல்கத்தாவில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.




# புதுச்சேரி தி.மு.க. வேட்பாளர் பட்டியல் வெளியீடு

புதுச்சேரியில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அமைத்து போட்டியிட உள்ளது. அங்குள்ள 30 தொகுதிகளை கூட்டணி கட்சிகளுடன் பங்கீடு செய்வது குறித்து பல்வேறு கட்டங்களாக பேச்சு நடைபெற்றது.

இறுதியாக நேற்று முன்தினம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சியினரிடையே சுமார் 3 மணி நேரமாக பேச்சு நடைபெற்றது. தி.மு.க. தரப்பில் ஜகதரட்சகன் எம்.பி., புதுச்சேரி தரப்பில் முன்னாள் முதல்வர் நாராயணசாமி, புதுச்சேரி காங்கிரஸ் அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் இந்த பேச்சில் கலந்து கொண்டனர். பேச்சில் உடன்பாடு ஏற்பட்டதையடுத்து, புதுச்சேரியில் தி.மு.கவுக்கு 13 தொகுதிகளும், காங்கிரஸுக்கு 15 தொகுதிகளும், கூட்டணி கட்சிகளுக்கு (இந்திய கம்யூனிஸ்ட், வி.சி.க.) 2 தொகுதிகளும் ஒதுக்கீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் 12 தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் தலைமை இன்று வெளியிட்டுள்ளது. தி.மு.க. போட்டியிடும் 13 தொகுதிகளில், பாகூர் தொகுதிக்கான வேட்பாளர் மட்டும் பிறகு அறிவிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உருளையன்கோட்டை – எஸ். கோபால், உப்பளம் – வி. அனிபால்கென்னடி, மங்கலம் – சண் குமரவேல், முதலியார்பேட்டை – எல்.சம்பத், வில்லியனூர் – ஆர். சிவா, நெல்லித்தோப்பு – வி.கார்த்திகேயன், ராஜ்பவன் – எஸ்.பி. சிவகுமார், மண்ணாடிபட்டு – ஏ. கிருஷ்ணன், காலாப்பட்டு – எஸ். முத்துவேல், திருப்புவனை(தனி) – ஏ. முகிலன், காரைக்கால் (தெற்கு) – நாஜிம், நிரவி திருப்பட்டினம் – நாகதியாகராஜன் ஆகியோர் 12 தொகுதிகளுக்கான தி.மு.க. வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# சீனாவால் பாதிக்கப்பட்டிருக்கும் நட்பு நாடுகளுக்கு துணை நிற்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உறுதி



காணொலி வாயிலாக நடைபெற்ற குவாட் அமைப்பின் நான்கு நாடுகள் கொண்ட உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உரை நிகழ்த்தினார்.

இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா உள்ளடங்கிய குவாட் அமைப்பின் மாநாட்டில் பேசிய ஜோ பைடன், இதர மூன்று நாடுகளுக்கும் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிக்க அமெரிக்கா துணை நிற்கும் என்று உறுதியளித்துள்ளார்.

சீனாவால்குவாட்நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள பதற்றம் தணிய வேண்டும் என்றும் இந்தோ பசுபிக் பகுதியில் அமைதி நிலவ துணை இருப்பதாகவும் அமெரிக்கா உறுதி அளித்துள்ளது.

பிரதமர் மோடியை காண்பது மகிழ்ச்சியளிப்பதாக ஜோ பைடன் தமது காணொலி உரையில் தெரிவித்தார்.

# கிரீஸ் நாட்டில் சொகுசு கப்பலில் தீ கரும்புகை வெளியேறியதால் பதற்றம்



கிரீஸ் நாட்டில் Corfu தீவுப் பகுதியில் இருந்த சொகுசு கப்பலில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

அந்த கப்பலில் தீப்பிடித்த இடத்தில் இருந்து அடர்த்தியான கரும்புகை குபு குபுவென வெளியேறிய படி இருந்தது. சம்பவம் பற்றி தகவல் அறிந்த தும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்று நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கப்பலில் தீப்பிடித்ததற்கான விவரம் எதுவும் தெரிய வரவில்லை. மேலும் இந்த தீ விபத்தில் உயிரிழப்பு மற்றும் சேத விவரம் குறித்து எதுவும் தெரிய வில்லை. கடலில் நின்ற பிரமாண்ட கப்பல் தீப் பிடித்து எரிந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மியன்மார் நாட்டை சேர்ந்தவர்களுக்கு தற்காலிக அடைக்கலம் - அமெரிக்கா



மியன்மார்நாட்டில்இராணுவம் திடீரென்று புரட்சியில் ஈடுபட்டு ஆட்சியை கைப்பற்றியது. இந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உள்ளிட்ட ஏராளமான தலைவர்களை கைது செய்து வீட்டுக் காவலில் வைத்துள்ளது.

ராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதையடுத்து அவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிசூடு உள்ளிட்ட தாக்குதல்களை நடத்தி வருகிறது.

ஆட்சியைகைப்பற்றியமியன்மார் இராணுவத்துக்கு அமெரிக்காஉள்ளிட்டஉலகநாடுகள்கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இதில்மியன்மார்இராணுவதலைவர்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது. மேலும் நேற்று மியன்மார் இராணுவதளபதியின் 2 குடும்ப உறுப்பினர்கள் மீது பொருளாதாரா தடையை விதித்துள்ளது.

இந்த நிலையில் இராணுவ ஆட்சி மற்றும் வன்முறை காரணமாக நாடு திரும்ப முடியாமல் தவிக்கும் மியன்மார் மக்களுக்கு தற்காலிகமாக அடைக்கலம் கொடுக்க தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு துறை செயலாளர் மயோர்காஸ் கூறும் போது, 'தற்காலிக பாதுகாக்கப்பட்ட நிலை என்ற முடிவின் கீழ் மியன்மார் நாட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தற்காலிகமாக அமெரிக்காவிலேயே தங்கி இருக்க முடியும்' என்றார்.

# நைஜீரியாவில் பயங்கரவாதிகள் அட்டூழியம் பாடசாலையில் புகுந்து 30 மாணவர்கள் கடத்தல்

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹாரம் உட்பட பல்வேறு பயங்கரவாத குழுக்கள் கடும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவர்கள் கிராமங்களுக்குள் புகுந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்ததோடு பாடசாலை மீது தாக்குதல் நடத்தி மாணவ, மாண விகளை கடத்திச்செல்வதைவழக்கமாகக்கொண்டுள்ளனர்.

அதிலும் குறிப்பாக, அண்மைக்காலமாக பள்ளி மாணவ, மாணவிகள் கடத்தப்படும் சம்பவம் அடிக்கடி நிகழ்கின்றன.

இந்நிலையில், நைஜீரியா நாட்டின் வட மேற்கு மாகாணம் கதுனாவில் இகாபி என்ற நகரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை வழக்கம்போல் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன.

அப்போது மோட்டார் சைக்கிள்களில் வந்த பயங்கரவாதிகள் சிலர் துப்பாக்கிகளுடன் வகுப்பறைக்குள் நுழைந்தனர். அதன்பின், அவர்கள்




பெண்கள் உட்பட 30 மாணவர்களை துப்பாக்கி முனையில் மிரட்டி கடத்திச் சென்றனர். இது தவிர பாடசாலை ஊழியர்கள் சிலரும் கடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே, கடந்த 2 வாரங்களுக்கு முன் ஜம்பாரா மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலையில் இருந்து 279 மாணவிகள் கடத்தப்பட்டதும், அரசு நடத்திய பேச்சுக்கு பின் அவர்கள் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# பிரேஸிலில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிக்கு அதிகாரப்பூர்வ அனுமதி

சீரம் மற்றும் ஒக்ஸ்போர்ட் நிறுவனத்தின்அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிக்கு பிரேசில் சுகாதார கட்டுப்பாடு ஆணையம் அதிகாரப்பூர்வ அனுமதி வழங்கி உள்ளது.


பிரேஸிலில்கடந்தஒருநாளில் மட்டும் 2 ஆயிரத்து 500 பேர் கொரோனாவால் உயிரிழந்தமையை அடுத்து தடுப்பூசி போடும் பணி தீவிரப்படுத்தப் பட்டு உள்ளது.

இந்த நிலையில் பிரேஸில் சுகாதாரத்துறை கட்டுப்பாட்டு ஆணையம் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை பொது விநியோகம் செய்ய பூரண அனுமதியை வழங்கி உள்ளது.

இதுகுறித்து இணையதள கலந்துரையாடலில் பேசிய பிரேஸில் சுகாதார கட்டுப்பாட்டு ஆணைய தலைமை இயக்குநர் கஸ்டாவோ மென்டிஸ் (Gustavo Mendes) அஸ்ட்ராஜெனெகாவின் இறுதி கட்ட ஆய்வு தரவுகள் திருப்தி அளிக்கும் வகையில் இருந்ததை அடுத்து அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும், பிரேஸிலின் பியோகிரஸ் நிறுவனத்துடன் இணைந்து தடுப்பூசி தயாரிப்பு பணியை தீவிரப்படுத்த முடிவு செய்து உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே சீரம் நிறுவனத்தின் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி பிரேஸிலில் அவசர கால தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது.

# ஆயிரத்து முன்னூறு கோடிக்கு ஏலம் போன டிஜிட்டல் ஓவியம்



புகழ்பெற்ற டிஜிட்டல் ஓவியக் கலைஞரான பீப்பிலின் டிஜிட்டல் ஓவியம் சுமார் 501 கோடி ரூபாய்கு ஏலம் விடப்பட்டது.

அமெரிக்காவில் அமைந்துள்ள கிறிஸ்டி என்ற ஏலம் விடும் நிறுவனம், உலகம் முழுவதுமுள்ள பழைமையான, தொன்மைவாய்ந்த பொருள்களை பாதுகாத்து ஏலம் விட்டு வருகிறது.

அந்த வகையில் டிஜிட்டல் ஓவியக் கலைஞரான பீப்பில் என்பவர், கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் சேகரித்த கிட்டத்தட்ட 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓவியங்கள், டிவிட்டர், வீடியோக்கள் ஆகியவற்றை டிஜிட்டல் வடிவில், ஒரே புகைப்படத்தில் சேர்த்து collage செய்துள்ளார்.

ஜே.பெக் format - இல் உள்ள இந்த புகைப்படம் ஆயிரத்து 300 கோடி இலங்கை ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

# நான்கு நாடுகளின் உச்சி மாநாடு மீண்டும் வருட இறுதியில் கூடும்




குவாட் கூட்டமைப்பின் முதல் உச்சி மாநாடு நேற்று காணொலி வாயிலாக நடைபெற்றது. இதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன், ஜப்பான் பிரதமர் யோஷின்டே சுகா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசித்தனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பருவநிலை மாற்றம், கொரோனா சூழல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப் பட்டன.

இந்நிலையில், குவாட் நாடுகளின் உச்சி மாநாடு நடப்பு ஆண்டு இறுதியில் மீண்டும் நடைபெறும் என வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த மாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் நேரடியாக பங்கேற்று ஆலோசிப்பார்கள் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்தார்.

குவாட் கூட்டமைப்பு ஆலோசனை கூட்டத்தில் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாட்டு தலைவர்களுடன் கலந்துரையாடிய படத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

D.C.M$_N$ - யாழ் நகர்
A/L 2023 கலை, வர்த்தக வகுப்புக்கள்
வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.
கலைப்பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
தமிழ் வழுமையான முன்னணி ஆசிரியர்
➢ புவியியல் P.S.V. தினேஸ்
➢ இந்துநாகரிகம் T.ஸ்ரீஸ்
➢ அரசியல் பொன் சந்துரு
➢ வரலாறு S.S.Y. பிரதீபன்
➢ அளவையியல் T.T.நீதன்
➢ ஊடகக்கல்வி N. தீபன்
➢ ICT லவேந்திரன்
➢ நாடகமும் அரங்கியலும் M. ஐங்கரன்
➢ கிறிஸ்தவ நாகரிகம் J.J. வசந்தன்
➢ விவசாய விஞ்ஞானம் B.பாலசுதன்
வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
➢ பொருளியல் S.ஜெயக்குமார்
➢ கணக்கீடு S. தவா
➢ வணிகக் கல்வி N.S. கபில்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமையில்
D.C.M$_N$ - நிர்வாகி 077 011 9434

# விளையாட்டு மைதானத்தில் அனுமதியற்ற சுற்றுமதில் மண்முனை பிரதேச சபைக்கு முன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



மண்முனை பிரதேச சபைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தில் காத்தான்குடி நகரசபையின் மூலம் சுற்று மதில் அமைக்கும் செயற்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அச் செயற்பாட்டிற்கு மண்முனை பிரதேச சபையினால் எவ்வித எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மண்முனை பிரதேச சபையின் உறுப்பினர்களும், ஆரையம்பதி பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து நேற்று மண்முனை பிரதேச சபைக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் சபையின் முன்னாள் தவிசாளர் மகேந்திரலிங்கம் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைப் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

பதவி மோகத்தால் எமது நிலங்களைத் தாரைவார்க்காதே, எமது பிரதேச சபை எல்லைக்குள் காத்தான்குடி நகர சபையே மூக்கை நுழைக்காதே, எமது விளையாட்டு மைதானம் எமக்குரியதே, ஆக்கிரமிக்காதே ஆக்கிரமிக்காதே எமது பகுதியை ஆக்கிரமிக்காதே, தவிசாளர் பதவிக்காக மண்ணை விற்காதே, இனமுரண்பாட்டைத் தோற்றுவிக்கும் செயலை நிறுத்து போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## றபீக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள றபீக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுபோட்டியில் கலந்து கொண்டு விளையாடவுள்ள அணிகளை அறிமுகம் செய்யும் நிகழ்வும் பிரிவுகளைத் தெரிவு செய்தல் நிகழ்வும் விளாஸ்டர் விளையாட்டு கழக தவிசாளர் ஏ.எல். முஹம்மட் தலைமையில் சாய்ந்தமருது அல் - ஜலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் 26 முன்னணி விளையாட்டுக் கழகங்களை கொண்ட இந்த சுற்றுப்போட்டியானது குழுக்கள் முறையில் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டதுடன் சகல விளையாட்டுக் கழங்களுக்கும் போட்டியின் விதிக்கோவைகள், எடுத்துரைக்கப்பட்டன.

இந்த சுற்றுபோட்டியின் சம்பியன் பட்டத்தை பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் 20,000 ரூபா பணப்பரிசும், இரண்டாவது இடத்தை தக்கவைக்கும் அணிக்கு 10,000 ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட உள்ளது. மாத்திரமன்றி தொடர்நாயகன், ஆட்டநாயகன், சிறந்த வீரர் உட்பட பல பரிசுகள் வழங்கப்பட உள்ளதாக இந்நிகழ்வில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மண்முனை பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் புதிய தவிசாளராக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள மண்முனை பிரதேச சபையில் 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று தவிசாளர் த.தயானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச சபையின் உபதவிசாளார் மா.சுந்தரலிங்கம் உட்பட உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற பாதீட்டு அமர்வின் போது முன்னாள் தவிசாளர் மகேந்திரலிங்கம் அவர்களால் முன்வைக்கப்பட்ட பாதீட்டு அறிக்கை தோல்வியடைந்ததையடுத்து கடந்த மாதம் சபைக்கான புதிய தவிசாளர் தெரிவு செய்யப்பட்டார். புதிய தவிசாளரினால் முதலாவது பாதீடாக இது முன்வைக்கப்பட்டிருந்தது.

இதன் போது தவிசாளரினால் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. பல உறுப்பினர்கள் பாதீட்டில் உள்ள குறை, நிறைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்தனர். இறுதியில் வாக்கெடுப்பின் மூலம் பாதீட்டினை நிறைவு செய்வது தொடர்பில் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாதீடு நிறைவேற்றத்திற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதன்போது பாதீட்டுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி, சுயேட்சைக் குழு, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதித் தவிசாளர் உட்பட 11 பேர் வாக்களித்தனர். பாதீட்டுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 05 உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் தவிசாளருடன் சேர்ந்து 06 பேர் வாக்களித்தனர்.

இதன்படி மேலதிக 05 பெரும்பான்மை வாக்குகளால் புதிய தவிசாளரின் 2021ஆம் ஆண்டுக்கானபாதீடுநிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தலைவர் அஷாத் சாலிக்கு எதிராக சட்டநடவடிக்கை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு பதிவு

கொழும்பு, மார்ச் 13

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஷாத் சாலிக்கு எதிராக சட்டநடவடிக்கையை எடுக்குமாறு கோரி குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முப்பீடங்களின் பிக்குகளின் ஒன்றியம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளது.

அண்மையில் கொழும்பில் ஊடக சந்திப்பை நடத்தியிருந்த அஷாத் சாலி, முஸ்லிம் சட்டங்களை மாற்றியமைக்க அரசாங்கம் முயற்சித்தாலும் அரசாங்கத்தின் சட்டங்களை தாங்கள் பின்பற்றப் போவதில்லை என்றும், மாறாகமுஸ்லிம்சட்டங்களையே பின்பற்றுவதாகவும் கூறியிருந்தார்.

அஷாத் சாலியின் இந்தக் கூற்று இனங்களுக்கு இடையே ஐக்கியத்தை பாதிப்படையச் செய்யும் என்று சுட்டிக்காட்டி பஸ்ஸர முல்லே பஞ்ஞாஜோதி தேரரினால் மேற்படி முறையிடப்பட்டுள்ளது.

## ஒரு லட்சம் வேலைவாய்ப்பு அம்பாறை நாவிதன்வெளியில்

### இரண்டாம் கட்ட நேர்முகத்தேர்வு

அம்பாறை, மார்ச் 13

ஒரு லட்சம் வேலைவாய்ப்பின் இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சை நேற்று அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது

நேற்று மதியம் 2 மணியளவில் குறித்த வேலைவாய்ப்பு நேர்முகப் பரீட்சையில் நாவிதன்வெளி பிரதேச எல்லைக்குட்பட்ட வேலையற்ற குடும்ப உறுப்பினர்கள் ஆர்வத்துடன் குறித்த நேர்முகத்தேர்விற்கு வருகை தந்திருந்தனர்.

இவ் வேலைவாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வினை சீராக மேற்கொள்வதற்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் வழிகாட்டலில் செயலக உத்தியோகத்தர்கள் சிறந்த நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

மேலும் குறித்த வேலைவாய்ப்பிற்கு நாவிதன்வெளி, அன்னமலை, சொறிக்கல்முனை, சாளம்பைக்கேணி மத்தியமுகாம் உள்ளிட்ட கிராம சேவக பிரிவில் உள்ள வேலையற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நேர்முகப் பரீட்சையில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் என்.நவனிதராஜா, நிருவாக உத்தியோகத்தர் கே.யோகேஸ்வரன் , நிருவாக கிராம உத்தியோகத்தர் கே.பி.மனோஜ் இந்திரஜித், பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் நாவிதன்வெளி இணைப்பாளர் எம்.ஐ.எம்.பாரீஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கான இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்வுகள் அனைத்து பிரதேச செயலகங்களிலும் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடளாவிய ரீதியான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ என்னும் தொனிப்பொருளில் வேலைவாய்ப்பற்றவர்களுக்கு வேலை வழங்குதல் நிகழ்ச்சி திட்டத்தில் கல்வியை பூர்த்தி செய்யாத 35,000 பயிலுநர்கள் முதற்கட்டமாக நாடாளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டார்கள் இவற்றுள் அம்பாறை மாவட்டத்திலும் பயிலுநர்கள் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்பட்டு அவர்களிற்கான தொழில் பயிற்சி வழங்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

## நாவிதன்வெளி குளங்களில் முப்பது ஆயிரம் மீன் குஞ்சுகள்



அம்பாறை நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அன்னமலை - 2 கிராமத்தில் கிழக்கு மாகாண மீன்பிடி பிரிவு ஊடாக அப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்துவதற்காக மீன் குஞ்சுகள் குளங்களில் விடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த வேலைத்திட்டமானது மீன்பிடித் தொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண மீன்பிடி பிரிவின் முயற்சியின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளரினால் அன்னமலை குளத்தில் மீன்குஞ்சுகள் விடப்பட்டதுடன் பிரதேச நீரியல்வள அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.ரதனின் கண்காணிப்பின் கீழ் இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ் திட்டத்தின் கீழ் சுமார் 30,000 மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளதுடன் இம்மீன் குஞ்சு வகைகளில் விரால் மற்றும் கணையான் என்பன உள்ளடங்குகின்றன.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள அலைமகள் மீனவர் சங்கத்தினருக்கான ரூபா 10 லட்சம் பெறுமதியுடைய கட்டடம் அமைப்பது தொடர்பிலும் அப்பகுதி மீனவர்களிடம் கலந்துரையாடல் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் கிராம சேவக உத்தியோகத்தர் ரி.கேந்துஜன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ரேணுகா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் 10 ஆவது நாளாகவும் தொடரும் உணவு ஒறுப்பு போராட்டம்!

## பொலிஸாரால் கூரைகள் அகற்றல்




சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் 10ஆவது நாளாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு முன்பாக இந்தச் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெறுகின்ற நிலையில், நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை போராட்டம் நடைபெறும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரமும், பதாகைகளும் அகற்றப்பட்டுள்ளன. எனினும், அத்தனை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இன்றும் போராட்டம் தொடர்கின்றது.

மட்டக்களப்பு பொலிஸாரால் இந்த அகற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில், கறுப்புக் குடைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை, கூடாரம் மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டமை தொடர்பாக, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்வதற்குச் சென்றவேளை, கூடாரம் உள்ளிட்டவற்றை தாமே அகற்றினர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் என அருட்தந்தை க.ஜெகதாஸ் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாகவே குறித்த கூடாரம் உள்ளிட்டவை அகற்றப்பட்டதாக, குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தங்களிடம் தெரிவிக்கப்பட்டதாக அருட்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நீதிமன்றக் கட்டளை தொடர்பாக எந்த வித அறிவிப்புகளும் தமக்கு வழங்கப்படாமல், எவ்வித முன்னறிவித்தலும் வழங்கப்படாமல் தன்னிச்சையாக இந்தச் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன், இது சட்ட விரோதமான செயலென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவுசெய்துள்ளதாக அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சாத்வீக ரீதியான, அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நீதி கோரிய போராட்டம் அனைத்துத் தடைகளையும் தாண்டி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவிக்கையில், 'நாங்கள் போராட்டம் நடத்தும் கூடாரங்களை பொலிஸார் அகற்றிச் சென்றமை இந்த நாட்டில் நீதி செத்துவிட்டது என்பதையும் அநீதி தலைவிரித்தாடுகின்றமையையும் காட்டுகிறது.

எனினும், நாம் சுடும் வெயிலிலும் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என்பதற்காகப் போராடி வருகிறோம். கடந்த 11 வருடங்களாக நாம் முன்னெடுக்கும் போராட்டங்களிலும் பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

எனினும், மனித உரிமைகள் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பல அமைப்புகள் உள்ளபோதிலும் எங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக்கேட்பதற்கு முன்வராமல் மௌனித்துப் போயுள்ளன.

இந்நிலையில், இந்த நாட்டில் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதை சர்வதேச சமூகம் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும் - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இனவாதச் செயற்பாடுகளுக்கு கொழும்பில் எதிர்ப்பு போராட்டம்!




நாட்டில் இனவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று வெள்ளிக்கிழமை போரட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த போராட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் சம உரிமை இயக்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

# வவுனியாவில் சமுர்த்தி வீடமைப்பு திட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு!



வவுனியா, மார்ச் 13

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 'திரிய பியச' விசேட வீடமைப்பு திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வுகள் வவுனியா மாமடு மற்றும் அலகல்ல பிரதேசங்களில் இடம்பெற்றன.

குறித்த திட்டத்தில், வவுனியாவில் 28 வீடுகள் தலா இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவருகின்றன. அவற்றில் பூர்த்திசெய்யப்பட்ட இரண்டு வீடுகள் நேற்று (வெள் ளிக்கிழமை) பயனாளிகளிடம் கைய ளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன, வவுனியா மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி ச.பத்மரஞ்சன், வவுனியா தெற்குப் பிரதேச செயலாளர் காஞ்சன குமார உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இரவு வேளைகளில் வீதிகளில் கட்டாக்காலிகள்

மட்டக்களப்பு, மார்ச் 13

மட்டக்களப்பு விளாவெட்டுவான் கிராமத்தில் இரவு வேளைகளில் வீதிகளில் திரியும் கட்டாக்காலி மாடுகளினால் மக்கள் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் வீதிகளில் சுற்றித் திரிவதால் வீதிகளில் பயணம் செய்வோர், வேலைக்கு சென்று வீடு திரும்புவோர் எனப் பலரும் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.

அதேவேளை இக்கட்டாக்காலி மாடுகளால் பலரும் வீதி விபத்துக்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இவ் வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படாமையே இதற்கு முக்கிய காரணமாகும். கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு இப் பகுதி பிரதேச சபை தவிசாளரோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் அப்பகுதி மக்கள் கேட்டு நிற்கின்றனர்.

# அரசின் சீனிக் கொள்ளை வரலாற்றில் பேசப்படும்!

## காவிந்த ஜயவர்தன



அரசாங்கத்தின் சீனிக்கொள்ளை வரலாற்றில் பேசப்படும். இந்த கொள்ளையூடாக நாட்டு மக்களின் வரிப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதுடன், நாம் அருந்தும் தேநீருக்கு கூட பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

முறைப்பாடு அளிப்பதற்காக நேற்று வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வந்திருந்த காவிந்த ஜயவர்தனவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, அதற்குப் பதிலளிக்கும் முகமாகவே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

அதேபோன்று தற்போதைய அரசாங்கம் 'உனது வாயிலும் சீனி எனது வாயிலும் சீனி' என்று கூறிக்கொண்டு தனது சகாக்களுக்கு கொள்ளையிடுவதற்கு வாய்ப்பளித்து வருகின்றது.

பட்டப்பகலில் மத்தியவங்கி கொள்ளையில் ஈடுபட்ட கொள்ளையர்களை கைது செய்வதாகத் தெரிவித்தே அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால் தற்போது தங்களது சகாக்களுடன் இணைந்து சீனி கொள்ளையில் ஈடுபட்டுள்ளதுடன் , பல மில்லியன் ரூபா பணம் இதன்போது கொள்ளையிடப்பட்டுள்ளது.

சாதாரண மக்களின் வரிப் பணத்தை கொள்ளையிட்டமை மட்டுமன்றி நாம் அருந்தும் தேநீருக்கு தலையீட்டை செய்துள்ளது. நாட்டு மக்களின் வரிப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காது இருப்பது தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும்.

எதிர்க்கட்சி முறைப்பாடு அளிக்கும் வரையில் காத்திருப்பதில் அவசியமில்லை. அதற்கு முன்னரே அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். இந்த 1500 கோடி ரூபா பணம் இருந்திருந்தால் அவற்றுக்கு கொவிட் - 19 தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடிந்திருக்கும்.

அப்போது நாட்டு மக்கள் அனைவருக்கும் கொவிட் தடுப்பூசிகளை வழங்கியிருக்கலாம். இந்நிலையில் அந்தரவின் சீனிக் கதை எவ்வாறு வரலாற்றில் இடம்பிடித்துள்ளதோ, அதேபோன்று தற்போதைய அரசாங்கத்தின் சீனிக் கொள்ளை தொடர்பான கதையும் வரலாற்றில் இடம்பிடிக்கும். - என்றார்.

கேள்வி :- முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறைக்குள் வைத்து செல்பி புகைப்படம் எடுத்துக் கொண்ட விவகாரம் தொடர்பான உங்களது நிலைப்பாடு என்ன?

பதில்:- இந்த புகைப்பட விவகாரம் தொடர்பான முழு விவரமும் எனக்குத் தெரியாது. எனினும் நாட்டின் சட்டவிதிகளுக்கு நாம் அனைவரும் கட்டுப்பட்டே செயற்படவேண்டும்.

கேள்வி :- இந்த புகைப்பட விவகாரம் காரணமாக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மேலும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஏதும் கூறவிரும்புகின்றீர்களா?

பதில்:- ரஞ்சன் ராமநாயக்க என்பவர் எப்போதுமே நேர்மையான ஒரு தலைவர். அவர் நீதியின் பக்கம் நின்று செயற்பட்டவர். தற்போது அவருக்கு தண்டனை வழங்கபட்டுள்ளது. இந்நிலையில் மேலும் அவருக்கு தண்டனைகளை அதிகரிப்பது முறையற்ற செயற்பாடாகும். நேற்று முன்தினம் அவருடைய பிறந்ததினம் என்றபோதிலும் எம்மால் அவருக்கு வாழ்த்து தெரிவிக்ககூட முடியாமல் போனது. அதனால் அவர் தொடர்பில் சிறிது விட்டுக் கொடுப்புடன் சிந்திக்க வேண்டும். இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி என்றவகையில் நாம் எப்போதும் அவருக்கு ஆதரவாகவே செயற்படுவோம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.03.2021இல் வெளியிடப்பெற்றது.